## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்
## அசல் வழக்கு எண். 685 /2021

**2022–ம் ஆண்டு ஜீலை மாதம் 18 ம் நாள் திங்கள் கிழமை** வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய PW–2 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. விஜயா, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சுப்ரமணியன் | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார்/ கணவர் பெயர் | :முத்துக்கிருஷ்ணன் | வட்டம் | :குன்னம் |
| கிராமம் | :அகரம் சீகூர் | சமயம் | : – |
| சாதி | : – | வயது | : 63 /2022 |

**அரசு தரப்பு முதல் விசாரணை**

நான் தாவா வழக்கில் 2–ம் வாதி ஆவேன். என்னால் தாக்கல் செய்யப்படும் நிருபன வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதை என் தரப்பு முதல் விசாரணையாக ஏற்க வேண்டுகிறேன். வா.சா 1 ஐ எனக்கு தெரியும் அவர் நிலத்திற்கு அருகில் எனது நிலம் உள்ளது. என்னுடைய விவசாய நிலத்தை கடந்துதான் வாதிகள் செல்ல வேண்டும், எனது பெயரில் நிலம் உள்ளதற்கான கணிணி பட்டாவை எனது தரப்பு ஆவணமாக வா.த.சா.ஆ 6 ஆக தாக்கல் செய்கிறேன். மேலும் எனது பெயரில் உள்ள ஆதார் அட்டை நகலை வா.த.சா.ஆ 7 ஆக தாக்கல் செய்கிறேன். வாதி மற்றும் பிரதிவாதிக்குள் பாக பிரிவினை ஆன விபரம் எனக்கு தெரியும் பிரதிவாதிகள் 2–ம் வாதிக்கு பாகப்பிரிவினையில் பிரிந்த 9 சென்ட் நிலத்தினை ஆக்கிரமித்துக்கொண்டார்கள். மேற்படி விபரம் எனக்கு தெரியும்.